பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 10 சனிக்கிழமை 26.07.2025 கதிர் 259

# புதிய அரசமைப்பு வேலைத் திட்டம் ஆரம்பம் எமது ஆட்சியில் அதனை நிறைவேற்றுவோம்

## பிரதமர் ஹரினி உறுதியளிப்பு

புதிய அரசமைப்புக்கான ஆரம்பகட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எமது ஆட்சி காலத்துக்குள் புதிய அரசமைப்பு திருத்தங்களை மேற்கொள்வோமென பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், புதிய அரசமைப்பு திருத்தம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் அஜித் பி பெரேரா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு ஒன்று நாட்டுக்குத் தேவையாகும். அது இந்த நாட்டின் அடிப்படைச் சட்டமாகும். அதனால் ☞ 2

# இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அரசியலுக்கு வந்த பின்னர் எப்படிக் கோடிக் கணக்கான ரூபாய் சொத்துக்களைச் சேர்த்தார் ☞ 2

# மேலும் 40 நாடுகளுக்கு இலவச வீசா தர முடிவு

சுற்றுலாத்துறை அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு மேலும் 40 நாடுகளுக்கு இலவச வீசா வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது, இந்த தீர்மானத்தினால் திறைசேரிக்கு 66 மில்லியன் டொலர்கள் வருடாந்த வருமான இழப்பு ஏற்படும். எனினும் சுற்றுலாத்துறை ஊடாக அதனைவிட அதிக வருமானத்தைப் பெற எதிர்பார்ப்பதாக ☞ 2

# சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி இன்று போராட்டம்

## வடக்கு கிழக்கு எங்கும் நடத்த ஏற்பாடு

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான அநீதிக்கு சர்வதேச நீதிப் பொறிமுறையை வலியுறுத்தி இன்றையதினம் வடக்கு கிழக்கு தழுவிய பாரிய மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் காலை 10 மணியளவில் முன்னெடுக்கப் படவுள்ள குறித்த போராட்டமானது யாழ்ப்பாணத்தில் செம்மணி மனித புதைகுழிப் பகுதியிலும், முல்லைத்தீவில் மாவட்ட செயலகத்திற்கு அருகாமையிலும், கிளிநொச்சியில் கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகாமையிலும், வவுனியாவில் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகாமையிலும், மன்னாரில் நகரப் பகுதியிலும், அம்பாறையில் திருக்கோவில் ☞ 2

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் மறைப்பதற்கு எதுவும் இல்லை

## பிரதமர் ஹரினி சபையில் தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணையில் மறைப்பதற்கு எங்களுக்கு ஒன்றும் இல்லை. அனைத்து விடயங்களையும் முன்வைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுப்போம். அதேநேரம் தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகள் எமது ஆட்சியின் கீழ் இருப்பார்களானால், ☞ 2

# அரசுத் தலைவர் அடுத்த வாரம் மாலைதீவு பயணம்

அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஜூலை 28 அரசுமுறைப் பயணமாக மாலைத்தீவுக்குச் செலகிறார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மாலைதீவு அரசுத் தலைவர் முகமது முய்சுவின் அழைப்பின்பேரில் அரசுத் தலைவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். அரசுத் தலைவர் ஜூலை 30 வரை மாலைதீவில் ☞ 6

# செம்மணியில் நேற்று வரையில் 90 எலும்புக்கூடுகள் அடையாளம்

## முறையாக அடக்கம் செய்யப்பட்டவை மீண்டும் மூடப்பட்டன

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் உள்ள இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் நேற்று மேலும் 2 எலும்புகூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுடன் மொத்தம் 90 எலும்புக்கூடுகள் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்டவற்றுள் 5 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டன.

அதன் அடிப்படையில் கடந்த 5 நாட்களாக முன்னெடுக்கப்பட்டு அகழ்வு பணியில் மட்டும் 25 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் ☞ 6

# மாகாண சபைகளை பலவீனப்படுத்தும் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை

## சாணக்கியனுக்கு ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தில் பதில்

மாகாண சபைகளை பலவீனப் படுத்தும் எந்த நடவடிக்கையிலும் ஆளும்தரப்பு ஈடுபடவில்லையென சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது போக்குவரத்து அமைச்சிடம் கேள்வியெழுப்பி உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், சகல அமைச்சுகளும் மாகாண சபைகளை பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றன என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்ததாவது:

இம்முறை மாகாண சபைகளின் செலவுக்காக கடந்த வருடங்களை விடவும் மூன்று மடங்கு ஒதுக்கியுள்ளோம். எங்களுக்கு வங்குரோத்து ☞ 2

# வரலாற்றில் மறக்க முடியாத தலைவரே மறைந்த சம்பந்தன்

## எதிர்க்கட்சித் தலைவர் இரங்கல்

இலங்கை அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத ஒருவரே மறைந்த சம்பந்தன். எமது அரசியல் வரலாற்றில் உருவாகிய சிரேஷ்ட தலைவர்களிடையே சிறந்த குணாம்சங்களுடனான மதிப்பு ☞ 6

# இரு தலைமுறைத் தமிழர்களின் வரலாற்றில் ஈடுசெய்யமுடியா இழப்பு சம்பந்தனின் மறைவு

## சிறீதரன் எம்.பி. ஆழ்ந்த இரங்கல்

மறைந்த பெருந் தலைவர் சம்பந்தனின் மறைவென்பது, ஈழத்தமிழினத்தின் இருதலைமுறை அரசியல் வரலாற்றில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகவும், அவரது அரசியல் தலைமையை ஏற்றிருந்த எங்களுக்கு இனியொருபோதும் நிரப்பவே முடியாத ☞ 6

# அரசுத் தலைவர், பிரதமர் பதவிகளுக்கும் பொருத்தமானவராக இருந்தவர் சம்பந்தன்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன், இந்த நாட்டின் அரசுத் தலைவர் மற்றும் பிரதமர் பதவிகளுக்கும் பொருத்தமானவராக இருந்தார். அந்த அதிஷ்டம் நாட்டுக்கு கிடைக்காவிட்டாலும் அவரின் குணாம்சங்களை கொண்ட தலைவர்கள் அந்தப் பதவிகளுக்கு செல்ல வேண்டுமென சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், பிலபிற்றிய, ஏக்கநாயக்க, லக்கி ஜயவர்த்தன மற்றும் மாலனி பொன்சேக்கா ஆகியோர் மீதான அனுதாபப் ☞ 2

# மருந்தாளர் பற்றாக்குறையை தீர்க்க நடவடிக்கை இல்லை

## எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

நாடு முழுவதும் நிலவும் மருந்தாளர்களின் பற்றாக்குறையை நிரப்பாமல் மருந்தகங்கள் தொடர்பாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டினார்

நாடாளுமன்றத்தில் நேற்று நிலையியற் கட்டளை 27/ 2 இல் கீழ் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதாரத் துறையில் மருந்துச் சேவைகள் அத்தியாவசியமானதொரு அடித்தளமாக கருதி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க புதிய மருந்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் மருந்தகங்களுக்கு கடுமையான ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

என்பதை விசாரிக்கும்படி நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் வியாழக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் சிறீதரனிடம் கேட்டார், அதற்கு 'வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு' என்ற வகையில் பதில் சொல்லியிருக்கிறார் சிறீதரன்.

உங்கள் பெயரில் எப்படிக் கோடிக் கணக்கான பணம் அல்லது சொத்துக்கள் வந்தன என்பதுதான் கேள்வி. அதற்கு அவரோ, தன் மீதான அரசியல் காழ்ப்புணர் காரணமாகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவித்தார். அத்துடன் நின்றிருந்தால்கூடப் பறவாயில்லை, அந்த முறைப்பாட்டை தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகத் தான் வந்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில்வழக்குத்தொடரவைத்தவர்களே பின்னணியில் இருந்து போடுவித்தார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார்.

அவர் பெயர் சொல்லவில்லையே தவிர தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரனைத்தான் அவர் குத்திக்காட்டினார். தான் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக வெற்றிபெற்ற பின்னர் தன்னோடு சேர்ந்து நின்று, தனதுகைகளைப்பிடித்துமேலேதூக்கி, சேர்ந்துபயணிப்போம்என்றுசொன்னவர்களே வழக்குமற்றும்முறைப்பாட்டின்பின்னணியில் இருக்கிறார்கள் என்று சொன்னார். அப்படி அவரது கைகளைப் பிடித்து, சேர்ந்து செயற்படுவோம் என்று சொன்னவர் சுமந்திரன்தான் என்பது உலகறிந்த இரகசியம் என்பதால் சிறீதரன் யாரை மறைமுகமாகச் சொல்கிறார் என்பதைப் புரிந்துகொள்வதில் சிரமம் ஒன்றும் இருக்காது.

சிறீதரனுக்கும் சுமந்திரனுக்குமான உட்கட்சி மோதல் என்பதும் உலகறிந்த பரகசியம்தான். எனவே சிறீதரன் சுமந்திரன் மீது பாய்வதும் எதற்கெடுத்தாலும் அவரைக் குற்றஞ்சாட்டுவதும் புதிதல்ல. ஆனால் இங்கே விவகாரம், கேட்கப்பட்ட கேள்விக்கு இது பதிலில்லையே என்பதுதான்.

சிறீதரனுக்கு எதிரான முறைப்பாட்டாளரோ விலாவாரியாக, விரிவாக அவர் மீதான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார். அதுவும் பெயர் விவரங்களோடு முன்வைக்கிறார். முறைப்பாட்டின் பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு சிங்களத்தில் வழங்கிய நேர்காணலில், கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் 'ஞானம் கிறீம் கவுஸ்' என்ற பெயரில் ஐஸ்கிறீம் கடைகள் சிறீதரனின் மனைவியின் பெயரில் இருக்கின்றன என்று சொன்னார். சிறீதரனின் மனைவியின் பெயர் சிவஞானகுமாரி. ஆனால் நெருங்கியவர்களால் ஞானா அக்கா என்றுதான் அறியப்படுபவர். அதேபோன்று தாரணி சுப்பர் மார்க்கெட் என்ற பெயரிலும் கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும்கூட சிறீதரனின் மகளின் பெயரில் 'சுப்பர் மார்கெட்'டுக்கள் இருக்கின்றன என்றும் முறைப்பாட்டாளர் தெரிவித்தார். சிறீதரனின் மகளின் பெயர் என்று முறைப்பாட்டாளர் தெரிவித்த பெயர் உண்மையில் சிறீதரனின் மகளின் பெயர் அல்ல.

இருந்தாலும் இப்படி முறைப்பாட்டாளர் விவரங்களைபிட்டுப்பிட்டுவைத்திருக்கையில் அவற்றுக்கு நேரடியாக விளக்கமளித்து மக்களிடம் ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அரசியலில் செய்வதைப் போலவே ஏதோ கேள்விக்கு ஏதோ பதில் என்று சிறீதரன் சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது முறைப்பாட்டாளர் சொல்வதிலும் உண்மை இருக்குமோ என்ற சந்தேகம் வலுக்கவே செய்கிறது. குற்றச்சாட்டுக்களை நேர்மையாக எதிர்கொண்டு, அதற்குரிய விளக்கத்தை மக்களுக்கு வழங்கியும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியும் தான் குற்றமற்றவர் என்பதை நிரூப்பிப்பதே ஓர் அரசியல் தலைவராக சிறீதரனின் கடமை. அதைவிடுத்து 'இந்தக் கேள்விக்கு இது பதிலில்லையே' என்று மக்களை நடிகர் வடிவேலு பாணியில் குழம்ப விடக்கூடாது.

சிறீதரனின் சகோதரர் வெளிநாட்டில் இருக்கிறார். அவர் சில பல வர்த்தக முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார். எனவே அவர் மூலமாக சிறீதரனின் குடும்பத்தினர் பெயரில் முதலீடுகள் வந்திருப்பதற்கானவாய்ப்புக்களைப் புறந்தள்ளிவிடமுடியாது. அப்படியிருப்பின் அதனை அவர் வெளிப்படையாக்க நிரூபித்து தன் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்வதே நேர்மையான வழி. தன் மீது சுமத்தப்பட்டது களங்கம் என்று நிரூபித்த பின்னரே அந்தக் களங்கத்தை யார் சுமத்த முற்படுகிறார்கள் என்று சிறீதரன் பதிலளிக்கவேண்டும். அதைவிடுத்து உட்கட்சி அரசியலுக்குள் தனது பிரச்சினையை இழுத்துவிட்டுத் தப்பிக்கொள்ளப் பார்க்கக்கூடாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சர்வதேச நீதிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலும், மட்டக்களப்பில் காந்திப் பூங்கா பகுதியிலும், திருகோணமலையில் சிவன்கோவில் பகுதியிலும் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்பாக அதனை ஏற்பாடு செய்துள்ள வடக்கு கிழக்கு சமூக இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் மனித குலத்திற்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எடுக்கப்படும் இலங்கை தொடர்பான தீர்மானம் வலுப்பெறும் வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு மக்கள் போராட்டத்தினை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு தமிழ் மக்களாகிய நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

குறிப்பாக இலங்கை தொடர்பான விடயம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நிகழ்ச்சி நிரலில் வைக்கப்பட்டு காலம் தோறும் புதுப் புது தீர்மானங்கள் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டே செல்கின்றது. இற்றைவரை இத்தீர்மானங்கள் ஊடாக குறிப்பாக வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த நன்மைகளும் கிடைத்ததில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இலங்கையின் அரசியல், பொருளாதாரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை அவதானிப்பதற்காக அண்மையில்இலங்கைக்குவருகைதந்தஐ.நா. மனிதஉரிமைஉயர்ஆணையாளர்அவர்களின் வருகைக்குப் பின்னர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் எமது தமிழ் மக்களின் தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்கக்கூடிய ஆரோக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதையிட்டு வருத்தப்படுகிறோம்.

அத்துடன் அண்மையில் ஐ.நா. சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய ஊடக நேர்காணலில்கூட எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்விற்குரிய பொறிமுறையாக அமையாத நிலையை நாங்கள் ஊடகச்செய்திகள் ஊடாகப் பார்க்கிறோம்.

இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறை ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு அமையப் போவதில்லை. மாறாக சர்வதேச பொறிமுறைகள் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்திப் பல தடவைகள் இலங்கைக்கு உள்ளேயும், சர்வதேசத்திலும் கோரி வருகின்றோம்.

இந்நிலையில் ஐ.நா. இலங்கை தொடர்பான பிரச்சினைகளுக்கு உள்ளகப் பொறிமுறைகள் ஊடகவே தீர்வினை மேற்கொள்ளவேண்டும் எனும் கருத்தினைத் தங்களது அறிக்கைகளிலும், ஊடக நேர் காணல்களிலும் குறிப்பிடுவதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில்தமிழ்மக்கள்தங்களுக்கான பிரச்சினைக்குரிய தீர்வு உள்நாட்டு பொறிமுறையை கடந்து சர்வதேச நீதிப் பொறி முறையின் ஊடாகக் கிடைக்கவேண்டும் என்பதனை மீள வலியுறுத்தி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் பெரும் மக்கள் போராட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளதோடு இதில் அனைத்துப்பொதுமக்களையும்பங்கேற்குமாறு கோருகின்றோம் என்றுள்ளது.

இதேவேளை, கொழும்பில் ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்துக்கு முன்னாலும், வடக்கு, கிழக்கு மலையக கூட்டிணைவு போராட்டத்தினை முன்னெடுக் கவுள்ளது.

## மாகாண சபைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்த நாடே கிடைத்திருந்தது. வீதிகளை அபிவிருத்திசெய்யநிதிஅமைச்சுசம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நிதியை ஒதுக்கியுள்ளது. இதனால் மாகாண சபை முறைகளை பலவீனப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

எந்த வீதியாக இருந்தாலும் அந்தந்த வீதிகள் அந்தந்த நிறுவனங்களுக்கு சொந்தமானவையே. நாங்கள் எந்தளவுக்கு நியாயமாக செயற்படுகின்றோம் என்பதனை வடக்கில் உள்ள சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிந்துள்ளனர். நாங்கள் மூன்றுமடங்குநிதியைமாகாணசபைகளுக்கு ஒதுக்கியுள்ளோம். ஆனால் நீங்கள் இனவாத அரசியலை செய்யவேண்டாம். அந்தக் கீழ்த்தரமான நாடகத்தை அரங்கேற்ற வேண்டாம்- என்றார்.

## மேலும் 40...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையும் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மையும்ஏற்பட்டுள்ளது. உலகலாவிய ரீதியில் பல்வேறு சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தர ஆரம்பித்துள்ளனர். இதனால் சுற்றுலாத்துறை மேம்பட்டுள்ளது. இதனை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் மேலும் 40 நாடுகளுக்கு இலவச வீசா வழங்குவதற்கு கடந்த அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது. அதற்கமைய ஒட்டுமொத்தமாக 47 நாடுகளுக்கு இலவச வீசா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதால் நாட்டுக்கு நேரடி வருமான இழப்பு ஏற்பட்டது. மேலும் 40 நாடுகளுக்கு இந்த சலுகை வழங்கப்பட்டால் எமக்கு 66 மில்லியன் டொலர் வருடாந்த வருமான இழப்பு ஏற்படும்.

எவ்வாறிருப்பினும் இந்த நஷ்டத்தையும் தாங்கிக் கொண்டு இந்த தீர்மானத்தை எடுப்பதற்கு அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தீர்மானித்தார். திறைசேரிக்கு இந்தஇழப்புஏற்பட்டாலும், சுற்றுலாத்துறையின் ஊடாக மறைமுகமாக இதனை விட அதிக வருமானத்தை ஈட்ட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இவ்வாறுவருமானத்தைஅதிகரிப்பதற்கான பொறுப்பினை சுற்றுலாத்துறையினரிடம் நாம் ஒப்படைக்கின்றோம். அமைச்சு என்ற ரீதியில் நாம் கொள்கை வகுப்புக்களையும், ஒழுங்குபடுத்தல்களையும் மேற்கொள்வோம். அவற்றுக்கு அப்பால் துறையை மேம்படுத்தும் பொறுப்பு அதிகாரிகளிடமே காணப்படுகிறது. எனவே இந்த தீர்மானம் இலகுவானதொன்றல்ல.

கொவிட் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உள்ளிட்ட காரணிகளால் சில நாடுகளுக்கு விசா வழங்குவது வரையறுக்கப்பட்டிருந்தது. அவற்றில் ஒரு உதாரணம் மாலைதீவாகும். மாலைதீவு அரசுத் தலைவர்யின் விசேட அழைப்பிற்கமைய அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழு அடுத்த வாரம் மாலைத்தீவு செல்லவுள்ளது. இதன்போது அந்த நாட்டுடன் சுற்றுலாத்துறை அபிவிருத்திகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

தற்போது மாலைத்தீவு பிரஜைகளுக்கு குறுகிய கால வீசா வழங்கப்படுகிறது. ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து மாலைத்தீவு பிரஜைகளுக்கு ஓராண்டுக்கான வீசா வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அதே வேளை சுகாதார சுற்றுலாத்துறையையும் மேலும் அபிவிருத்தியடைச் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

## புதிய அரசமைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் திருத்தம் மேற்கொள்ளும்போது அது தொடர்பில் ஆராயாமல், விசேட நிபுணர்களுடன் கலந்துரையாடாமல், குடிமக்கள்குழுக்களின்கருத்துக்களுக்குச் செவிசாய்க்காமல் குறுகிய காலத்தில் மேற்கொள்வது சாத்தியப்படாத ஒன்றாகும்.

விசேடமாக தற்போது இருக்கும் சில கட்டளைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டி இருக்கின்றன. அதனால் எமது ஆளும்தரப்பு அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. அதன் பிரகாரம் புதிய அரசமைப்புத்திருத்தம்தொடர்பானஆரம்பகட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆளும்தரப்பு புதிய அரசமைப்பு திருத்தம் மேற்கொள்ளும்போது அனைத்துத்தரப்பினரு டனும்கலந்துரையாடி, அனைத்துதரப்பினருக் கும் செவிசாய்க்க நடவடிக்கை எடுத்துள்ளது. விசேடமாக மக்கள் மயமான அரசமைப்பாகப் புதிய அரசமைப்பு திருத்தப்படவேண்டும் என்பதே எமது ஆளும்தரப்பின் நோக்கமாகும். அதனால் புதிய அரசமைப்பு திருத்தம் தொடர்பில் சமூக கருத்தாடல் ஒன்றுக்கு திறந்துவிடப்படவேண்டும், அதேபோன்று நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தாத ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களுக்கும் செவிசாய்க்கப்படும்.

அதன் பிரகாரம் ஆளும்தரப்பு வரைபு செய்யப்படும் புதிய அரசமைப்பு சமூகத்தில் அனைத்து தரப்பினரின் கருத்துக்களை மதித்து, வரைபு செய்யப்படுகின்ற, இதுவரை காலமும் உருவாகாத மக்கள் மயமான அரசமைப்பாக அமையும்.

அத்துடன் நாட்டின் பிரதான சட்டமான அரசமைப்பு அடிக்கடி திருத்தப்படக்கூடாது என்பதால், விசேட நிபுணர்களின் கருத்துக்களை கேட்டு, ஆழமாக ஆராய்ந்து தயாரிப்பதே எமது ஆளும்தரப்பின் நோக்கமாகும். அதனால் இதற்குச் சில காலம் தேவைப்படும். எமது கொள்கை பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வோம். எமது ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து இன்னும் ஒரு வருடம் செல்லவில்லை. இன்னும் எங்களுக்கு 4 வருடங்கள் இருக்கின்றன. அதனால் இது தொடர்பில் அவசரப்பட தேவையில்லை. எமது ஆட்சி காலத்துக்குள் புதிய அரசமைப்பு திருத்தங்களை மேற்கொள்வோம் என்றார்.

## உயிர்த்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கும் சட்டத்தை ஒரேமாதிரி யாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்போமென பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சமிந்தவிஜேசிறி கேட்ட கேள்விக்கு மேலதிக கேள்வியாக முஜிபுர் ரஹ்மான் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்,

முஜிபுர்ரஹ்மான் தனது கேள்வியின்போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சாரா உயிரிழந்தார் என்று இறுதியாகத் தெரிவிக்கப்பட்ட டீ.என்.ஏ. அறிக்கையை நாங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதேபோன்று அன்று எதிர்க்கட்சியில் இருந்த நீங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் பிரகாரம் தற்போது இந்த தாக்குதல் தொடர்பில் ஆளும்தரப்பு விசாரணை ஆரம்பித்திருக்கிறது. அதற்கு நாங்கள் பூரண ஆதரவை வழங்கத் தயார். ஆனால் தாக்குதல் நடந்த சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண கட்டளை தளபதியாக இருந்தவர் தற்போது ஆளும்தரப்பில் இருக்கும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுர ஜயசேகர, அன்று சாய்ந்தமருதில் குண்டு வெடித்தபோது, அந்த இடத்துக்கு முதலில் வந்ததும் இராணுவத்தினரேயாவர். அப்படியானால் சாராவுக்கு என்ன நடந்தது? அவரை யார் கடத்திச்சென்றார்கள் என்பது தொடர்பான தகவல் இராணுவத்துக்குத் தெரிந்திருக்கவேண்டும். அநுரஜயசிங்கவுக்கு தெரியாமல் இராணுவத்தினர் அங்குவர முடியாது. அவரும் உடனடியாக அதைத் தெரிந்திருக்காவிட்டாலும் பின்னராவது தெரிந்திருப்பார். அன்றைய ஆளும்தரப்புக்கு இந்ததாக்குதல்தொடர்பில்சம்பந்தம்இருப்பதாக அரசுத் தலைவர்யும் தெரிவித்திருந்தார். அப்படியானால் அன்றைய ஆளும்தரப்பின் கிழக்கு மாகாண கட்டளை தளபதியாக இருந்த அநுர ஜயசிங்க, தற்போது ஆளும்தரப்பின் பிரதி அமைச்சராக இருக்கும் நிலையில், அவருக்கு கீழ் உள்ளவர்களே தற்போது

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# இலங்கையுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் துருக்கி உறுதி

இலங்கை மற்றும் துருக்கிக்கு இடையேயான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்திய துருக்கி குடியரசின் தேசிய கல்வி அமைச்சர் யூசுஃப் தெகின், குறிப்பாக கல்வித் துறைக்கான பங்களிப்பை பற்றி வலியுறுத்தி அமைதி மற்றும் மனித நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்காக கல்வித் துறையில் ஒத்துழைப்பின் தேவையையும் எடுத்துரைத்தார்.

துருக்கி குடியரசின் தேசியக் கல்வி அமைச்சர் யூசுஃப் தெகின் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது அமைச்சரை வரவேற்ற பிரதமர் இலங்கை மற்றும் துருக்கி நாடுகளுக்கு இடையே நிலவிவரும் நீண்டகால நட்பு மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு குறிப்பாக பொருளாதாரம் உலக வர்த்தகம் மற்றும் கல்வித் துறைகளில் இருந்து வரும் ஒத்துழைப்பை நினைவுகூர்ந்தார். அத்தோடு சந்திப்பின்போது பிரதமர் துருக்கி முன்வைத்த புதிய கல்வித் திட்டத்தினைப் பற்றி எடுத்துரைத்தார்.

அத்தோடு இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு ஒத்துழைப்பை பலப்படுத்துவது குறித்த கருத்துப் பரிமாறல்கள் கல்வி உலக வர்த்தகம் தளவாடம் ஆற்றல் சுற்றுலா மற்றும் சுகாதாரத் துறைகளில் முக்கியத்துவம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இந்தப் பயணத்தின்போது துருக்கியின் தேசியக் கல்வி அமைச்சருக்கு பிரதமருடன் ஆக்கபூர்வமான உரையாடலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்ததற்காக தனது நன்றியைத் தெரிவித்தார்.

அத்தோடு இரு நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கான துருக்கியின் உறுதிப்பாட்டை குறிப்பாக கல்வித் துறைக்கானபங்களிப்பைபற்றிமீண்டும்வலியுறுத்திய துருக்கியின் தேசியக் கல்வி அமைச்சர் அமைதி மற்றும் மனித நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்காக கல்வித் துறையில் ஒத்துழைப்பின் தேவையையும் அவர் மேலும் எடுத்துரைத்தார்.

துருக்கிபிரதிநிதிகள்குழுவைபிரதிநிதித்துவப்படுத்தி துருக்கி குடியரசின் தூதுவர் செமிஹ் லுத்ஃபு துர்குத், தேசியக் கல்வி அமைச்சின் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் வெளிநாட்டு உறவுகள் பணிப்பாளர் நாயகம் நல் எர்யில்மாஸ் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கல்வி உயர்கல்வி மற்றும் தொழில்சார் கல்வி அமைச்சின் செயலர் நாலக கலுவெவ, பிரதமரின் மேலதிக செயலர் சாகரிகா போகஹவத்த ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# முன்னாள் அமைச்சர், பிரதியமைச்சரிடம் வாக்குமூலம் பெற நீதிமன்றம் உத்தரவு

தேசிய தொழிலாளர் நிறுவனத்துக்கு சொந்தமான இரு மாடி கட்டடத்தை கொண்ட இடத்தை, போலி உறுதி ஒன்றினை தயாரித்து 36 இலட்சம் ரூபாவுக்கு குத்தகைக்கு கொடுத்ததன் ஊடாக மோசடி செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் வணிக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, தொழிலஆளர் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க, கடுவலை நகர பிதா ரஞ்சன் ஜயலால் ஆகியோரிடம் வாக்கு மூலம் பதிவு செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்கிசை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கல்கிசை நீதிவான் சதுரிகா டி சில்வா இதற்கான உத்தரவை நேற்று கொழும்பு மோசடி தடுப்பு பொலிஸ் பிரிவுக்கு பிறப்பித்தார்.

இந்த மோசடி விவகார வழக்கு கல்கிசை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. இதன்போது விசாரணையின் போது கண்டறியப்பட்ட ஆவணங்களான குறித்த கட்டடத்தின்சான்றளிக்கப்பட்ட உறுதிப்பத்திரத்தின் நகல், வசந்த சமரசிங்கவை தேசிய தொழிலாளர் காங்கிரஸ்தொழிற்சங்கத்தின்தலைவராக அங்கீகரித்த 2017 செப்டம்பர் 3 ஆம் திகதி அன்று நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தின் அறிக்கை, இல 166, 206 மற்றும் 207 எனும் குத்தகை பத்திரங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள், குறித்த சொத்தின் உரிமை தொடர்பில் கடுவலை மாவட்ட நீதிமன்றம், கல்கிஸ்ஸ மாவட்ட நீதிமன்றம் மற்றும் சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடந்த வழக்கு அரிக்கைகலின் நகல்கள் ஆகியவை நீதிமன்றத்தில் கொழும்பு மோசடி தடுப்பு பிரிவு அதிகாரிகளால் மேலதிக அறிக்கை ஊடாக சமர்ப்பிக்கப்பட்டன.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

• CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
• NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
• வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
• ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
• GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 'சர்வதேச விசாரணை' என்பது எது?

இலங்கை தமிழர் பிரச்சினையின் தீர்விற்காக, 'சர்வதேச விசாரணை வேண்டும்' என்ற கோசம் நீண்ட காலமாகவே பரப்பப்பட்டு வருகிறது. குறிப்பாக 2009ஐத்தொடர்ந்த காலத்தில், காணாமல் போனவர்கள், பாலியல் குற்றங்கள், போர்குற்றங்கள் உள்ளிட்ட புகார்களின் நீதி தேடலாக இந்த கோசம் உருவெடுத்தது. அண்மையில் யாழ் மாவட்டம் செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள், இந்த கோசத்தை மேலும் தீவிரமாக்கி விட்டன. அதன் தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவதும் முக்கியமான அரசியல் நிகழ்வாகவே பார்க்கப்படுகிறது.

இவற்றில் எந்தவொரு கோணத்திலும், நீதிக்கு உரிய வழிகளை நாடுவதே தவறு என்று சொல்ல முடியாது. ஆனால் அந்த நீதி தேடல் எவ்வகை சர்வதேச நடவடிக்கையை நோக்கி இருக்கிறது என்பதில் தெளிவின்மை நிலவுகிறது. பொதுவாக, 'சர்வதேச விசாரணை' என்ற வார்த்தை பெரும்பாலும் உணர்வுப்பூர்வமான கோசமாகவே முன்வைக்கப்படுகிறது. ஆனால் சட்ட, நடைமுறை ரீதியில் அது எதை குறிக்கிறது என்பது மிகவும் குழப்பமானதும், மக்கள் மத்தியில் பிழையான எதிர்பார்ப்புகளை உருவாக்கும் வகையிலும் இருக்கிறது.

உதாரணமாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ணூஜ–மிளஷஜழிமிஷ்லிஜழியிளீஷஷ்துஷ்ஜழியிளீலிற்ஷமி ணூளீளீ) என்பது 2002 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த ஒரு நிரந்தர நீதிமன்றமாகும். இது ரோம் உடன்படிக்கையின் அடிப்படையில் இயங்குகிறது. ஆனால் இலங்கை அந்த உடன்படிக்கையில் கையெழுத்துப்போடவில்லையென்பதுமிகமுக்கியமானஉண்மை. இதன் பொருள், இலங்கையை அதன் முன் விசாரணைக்கு உட்படுத்த எந்தத் தடையற்ற வழியும் தற்போது இல்லை. இலங்கை அரசு ஒத்துழைக்காமை தொடரும் சூழ்நிலையில், சர்வதேச குற்றவியல் விசாரணைகள் நடைமுறைக்கு வருவது சாத்தியமற்றதாகவே அமைகிறது. இஸ்ரேல், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளும் இந்நிலையிலேயே இருந்து வருகின்றன. எனவே இதுவிடயத்தில் இலங்கை அரசுக்கே ஆதரவு அதிகம்.

இதேபோல், ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice – ICJ) என்பது நாடுகளுக்கிடையிலான வாதங்களை விசாரிக்கும் நீதிமன்றமாகும். இது தனிநபர்களின் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்காது. எனவே, போர்குற்றங்களை விசாரிக்கும் வகைதான் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்பதும், சர்வதேச நீதிமன்றம் என்பதும் ஒரு மாதிரிப் பெயர்கள் மட்டுமே அல்ல; சட்ட ரீதியாக முற்றிலும் மாறுபட்ட அமைப்புகள் என்பதும் தெளிவாக விளக்கப்படவேண்டும்.

இந்த நிலையில், 'சர்வதேச விசாரணை வேண்டும்' என்ற கோசம், உண்மையில் எந்த அமைப்பை நோக்கி உள்ளது? ஐ.நா.வின் விசாரணைப் பொறிமுறைதான் அவையா? அது கட்டாயம் அரச ஒத்துழைப்புத் தேவைப்படுவதா? அல்லது தீர்மானம் 30/1 போன்ற ஐ.நா. மனித உரிமை பேரவையின் தீர்மானங்களுக்குள் மட்டுமே உள்ளதா? இவை போன்ற அடிப்படையானவிளக்கங்கள், மக்களிடம்தெரிவிக்கப்படவேண்டும்.

மாற்றாக, உணர்வுபூர்வக் கோசங்களின் பின்னால் மறைந்து, உண்மை நிலைகளைக் கூறாததும், மக்களிடம் பொய்யான நம்பிக்கைகள் ஏற்படுத்துவதும், நீதிக்கே இல்லாத பாதையை காண்பிக்கும் மோசமான அரசியல் செயற்பாடுகளும் நிறுத்தப்படவேண்டியவை. தடுக்கப்படவேண்டியவை. உண்மையை வெளிக்கொணர்வதற்கான கோரிக்கைகளில் தெளிவும், பொறுப்பும், நடைமுறை யதார்த்தங்களும் உடன் இருக்க வேண்டும்.

தமிழ் அரசியல் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் உரிமைக் குழுக்கள், 'சர்வதேச விசாரணை' என்பது உண்மையில் எதை நோக்கி உள்ளது என்பதை வெளிப்படையாக எடுத்துக்கூறவேண்டும். இல்லையெனில், ஏற்கனவேகாயமடைந்த சமூகத்தில், மேலும் ஏமாற்றங்கள், நம்பிக்கையிழப்பு, விரக்தி என்பவை வளரும் அபாயமுண்டு.

நீதியின் பாதை உணர்வில் அல்ல, நடைமுறையில் அமையவேண்டும். உண்மையான சட்டவழிகளின் தாக்கங்களை உணர்ந்து, முறையான சிந்தனையுடன், நவீன மற்றும் வல்லமைமிக்க ஆதாரங்களுடன், சர்வதேச விசாரணையை எப்படி சாதகமாக முன்னெடுக்கலாம் என்பதைப் பற்றிய தெளிவான பாதைக் கோடுகளைத் தமிழர் தலைவர்கள் முன்வைக்க வேண்டிய கால கட்டம் இது.

பொதுவான கோசங்களைத் தாண்டி, தெளிவான வழிமுறைகள், நிரந்தர தீர்வுகளுக்கான தூண்டுகோள்கள், மற்றும் உண்மையை வெளிக்கொணர்வதற்கான நம்பகமான சட்டவழிகள் என்பவையே இனி தமிழர் நீதிதேடலின் அடித்தளமாக இருக்க வேண்டியுள்ளது.

# 10 வயது சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் 62 வயது முதியவர் வேலணையில் கைது

வேலணைத் துறையூரில் 10 வயது சிறுமி ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் குற்றச் செயலில் சந்தேகத்தின் பேரில் வேலணை துறையூர் பகுதியைச் சேர்ந்த 62 வயது நபர் ஒருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறுமியின் முறைப்பாட்டைத் தொடர்ந்து முதியவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். பாதிக்கப்பட்ட சிறுமி ஜுலை 19 அன்று துறையூர் கடற்றொழில் சங்கத்திற்கு அயலில் உள்ள கடைக்கு யூஸ் வாங்கச் சென்ற சமயம் அவர் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளானார் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

கடையின் உரிமையாளரான முதியர் சிறுமியை கடையின் உள்ளே அழைத்து குளிரூட்டியினுள் இருக்கும் 'யூசை' எடுக்குமாறு சிறுமிக்கு கூறியுள்ளார். சிறுமி 'யூசை' எடுக்க முற்பட்டபோது, சந்தேகநபர் சிறுமியை பின்புறமாக கட்டி அணைத்து பாலியல் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி வீடு திரும்பி சம்பவம் குறித்துத் தாயாரிடம் கூறியுள்ளார். ஆனாலும் தாயார் தனது சமூகம் மற்றும் அயலவருக்கு அஞ்சி பொலிசாருக்கு முறைப்பாடு செய்யத் தயங்கியுள்ளார்.

இருந்தும் சில சமூக நலன்விரும்பிகளின் முயற்சியால் சிறுமியின் தாயார் ஜுலை 23 தனது பகுதி கிராம சேவகருக்கு சம்பவத்தைத் தெரியப்படுத்தியதை அடுத்து ஜுலை 24 வேலணை பிரதேச செயலகத்திலுள்ள சிறுவர் நன்நடத்தை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் அன்றையதினமே முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

# இலங்கையுடன் முதலீட்டு வாய்ப்புகளை விரிவாக்குவதில் கனடா தீவிர கவனம்

## அந்நாட்டு உயர்ஆணையர் தெரிவிப்பு

ஊழலற்ற நிர்வாகத்துடன் மக்களிடம் நம்பிக்கையை வென்றுள்ள புதிய ஆளும்தரப்புடன் வணிக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்தும் கனடா ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கைக்கான கனடிய உயராணையர் எரிக் வோல்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்ற வளாகத்தில் இலங்கைக்கான கனடா தூதுவர் எரிக் வோல்ஸ் மற்றும் பொதுப்போக்குவரத்து, நெடுஞ்சாலை, துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோருக்கிடையிலான முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போது, ஊழலற்ற நிர்வாகத்துடன் மக்களிடம் நம்பிக்கையை வென்றுள்ள புதிய அரசாங்கத்துடன் வணிக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்த கனடா ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்தி வருவதுடன், விரைவில் இந்த நடவடிக்கைகளில் கனடா வணிக சமூகத்தையும் வர்த்தக பிரதிநிதிகளையும் ஈடுபடுத்தவுள்ளதாக கனடா தூதுவர் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் விமானசேவையின் அபிவிருத்தி, சுற்றுலாக் கைத்தொழில் ஊக்குவிப்பு, வர்த்தக கூட்டுறவுகள் மற்றும் இரு நாடுகளின் நாடாளுமன்ற ஒத்துழைப்பு ஆகிய பல துறைகளைப் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி பாதைக்கு மேலும் ஆதரவு வழங்க கனடா ஆளும்தரப்பு தயாராக உள்ளதாகவும் இலங்கைக்கான கனடா தூதுவர் எரிக் ல்ஸ் வலியுறுத்தினார். இச்சந்திப்பின்போது கனடா அரசின் வர்த்தக மற்றும் அரசியல் ஆலோசகராக உள்ள குவென் தெமலும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச தலைவரின் செயலருடன் ஜப்பானிய தூதுக் குழு சந்திப்பு

ஜப்பானிய ஆளும்தரப்பின் பொருளாதார, வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சு மற்றும் ஜப்பானிய வர்த்தக வாணிப மற்றும் கைத்தொழில்துறைப் பிரதிநிதிகள் குழு மற்றும் அரசுத் தலைவர்யின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோருக்கு இடையே அரசுத் தலைவர் அலுவலகத்தில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

இலங்கையில் ஜப்பானிய முதலீட்டை விரிவுபடுத்துவது குறித்து ஆராய்வதற்காக இந்த ஜப்பானிய தூதுக் குழு நேற்று முன்தினம் வருகை தந்துள்ளது. இலங்கையில் முதலீட்டுத் துறைகளில் காணப்படும் புதிய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்திய ஜப்பானிய தூதுக்குழு எதிர்வரும் நாட்களில் இலங்கையில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இது குறித்து ஆராயத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசுத் தலைவர்யின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஜப்பானின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சின், வர்த்தகக் கொள்கைப் பணியகத்தின் தென்மேற்கு ஆசிய அலுவலகத்தின் பணிப்பாளர் தொஷியுகி ஷிமானோ, அதன் பிரதிப் பணிப்பாளர் ஹிரோமி சுமி,

ஜப்பானின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சின் தென்மேற்கு ஆசிய பிராந்தியத்தின் பிரதிநிதி டொயகஸு நகமுனெ உள்ளிட்ட ஜப்பானிய அரசாங்கத்தின் பொருளாதாரம் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அமைச்சின் பிரதிநிதிகள், ஜப்பான் வர்த்தக, வாணிப மற்றும் தொலிற்துறைகளின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கையில் உள்ள ஜப்பானிய தூதரக அதிகாரிகள் குழுவினரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# தெஹிவளை துப்பாக்கிச் சூட்டு சந்தேகநபர் சுட்டுக் கொலை

## பொலிஸாரின் பதில் தாக்குதலில் சம்பவம்

அண்மையில் தெஹிவளையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

கஹதுடுவ பகுதியில் சந்தேகநபர் மறைந்திருந்த பகுதிக்கு நேற்று அதிகாலை சென்ற பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அங்கு சோதனைகளை முன்னெடுத்திருந்த போது இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச்சூட்டில் சந்தேக நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் "கொஸ் மல்லி" என்பவரின் பிரதான துப்பாக்கிதாரியாக செயற்பட்ட "ஜீவன் சாமர" என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். சம்பவத்தின் போது காயமடைந்த பொலிஸ் விசேட அதிரடிப்படை உறுப்பினர் ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

கடந்த 18 ஆம் திகதி கொழும்பு தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் சுதத் குமார என அழைக்கப்படும் "பஸ் அசித "என்பவர் மீது அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

எனினும் அவர் காயங்களுடன் உயிர் தப்பி இருந்தார். குறித்த துப்பாக்கிச் சூடு தொடர்பில் விசேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுவிசாரணைகள்முன்னெடுக்கப்பட்டு இருந்தன.

இதற்கமைய குறித்த துப்பாக்கிப் பிரயோகம் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் கொஸ் மல்லி என்பவரினால் ஒருங்கமைக்கப்பட்டிருக்கலாம் என விசாரணைகளில் வெளிக்கொணரப்பட்டிருந்தது.

இந்நிலையில் "பஸ் அசித" மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது ஜீவன் சாமர எனவும் அவர் கஹதுடுவ, பாலகம பிரதேசத்தில் உள்ள வாடி ஒன்றில் மறைந்திருப்பதாகவும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உளவுச்சேவை க்கு இரகசிய தகவல் ஒன்று கிடைக்க பெற்றிருந்தது.

இதற்கமைய ஸ்ரீ ஜயவர்தனபுர பொலிஸ் விசேட அதிரடிப்படையின விசேட குழுவொன்று சந்தேக நபரை கைது செய்ய நேற்று அதிகாலை 4.30 மணியளவில் சம்பவ இடத்துக்கு சென்றுள்ளது.

இதன்போது குறித்த நபர் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளார். இதனையடுத்து

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட பதில் துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.இதன்போது குறித்த வாடியில் இருந்து ரி-56 ரக துப்பாக்கி ஒன்றும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

41 வயதுடைய ஜீவன் சாமர என்பவரே சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளதுடன் அவர் திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக கூறப்படும் "கொஸ் மல்லி" என்பவரின் பிரதான துப்பாக்கிதாரியாக செயற்பட்ட ஒருவர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் 8 வருடங்களான பொலிஸ் விசேட அதிரப்படையில் கடமையாற்றியுள்ளதுடன் போதைப்பொருள் குற்றச்சாட்டில் அவர் கடந்த 2011 ஆம் ஆண்டு சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

மேலும் சந்தேக நபர் கவுடான பகுதியில் பெண்ணொருவரை திருமணம் செய்துள்ளதுடன் இதன்பின்னர் அவர் கொஸ் மல்லியுடன் நெருங்கி பழகி உள்ளதாக தெரியவருகிறது.

கல்கிசை, தெஹிவளை உள்ளிட்ட பல பிரதேசங்களில் கொஸ் மல்லியினால் ஒழுங்கமைக்கப்பட்ட பல்வேறு துப்பாக்கிபிரயோகங்களை குறித்த நபரே மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

குறித்த நபர் கடுமையாக போதைப்பொருளுக்கு அடிமையான ஒருவர் எனவும் அவர் 5 வெவ்வேறு சந்தர்ப்பங்களில் போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சர்வதேச நாணய நிதியத்தின் 5ஆவது மதிப்பாய்வு செப்டெம்பரில்

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதி (சிய்ப்) தொடர்பான ஐந்தாவது மதிப்பாய்வு செப்டம்பர் 2025 இல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுவதாக சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) தகவல் தொடர்பு பணிப்பாளர் ஜூலி கோசெக் தெரிவித்தார்.




வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று அவர் இதனைக் கூறினார்.

இலங்கையின் பொருளாதார நிலைமை நேர்மறையாக இருந்தாலும், உலகளாவிய சந்தை மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மைகள் நாட்டின் பொருளாதாரக் கண்ணோட்டத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்று ஜூலி கோசெக் வலியுறுத்தினார்.

ஐந்தாவது மதிப்பாய்வின் போது இந்தக் காரணிகள் மதிப்பீடு செய்யப்படவுள்ளதாகவும், இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாட எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உலகளாவிய சந்தை, பொருளாதார மற்றும் கொள்கை நிச்சயமற்ற தன்மைகளின் தாக்கம் உட்பட நாட்டின் பொருளாதாரம் குறித்த முழுமையான மதிப்பீடு இந்த மதிப்பாய்வின் போது மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

2025 ஜூலை 1 ஆம் திகதி, ஐஎம்எப் இன் நிர்வாகக் குழு நான்காவது மதிப்பாய்வை நிறைவு செய்து, இலங்கைக்கு 350 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியது. இதன்மூலம், விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி 1.74 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்தது.

இதற்கிடையில், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள் மூலம் பணவீக்கம் குறைவு, மேம்படுத்தப்பட்ட வருவாய் வசூல் மற்றும் அந்நியச் செலாவணி கையிருப்பு அதிகரிப்பு ஆகியவை ஊக்கமளிக்கும் முடிவுகளை வழங்கியுள்ளதாக ஜூலி கோசெக் கூறினார்.

2024 ஆம் ஆண்டில் நாடு நெருக்கடிக்குப் பிந்தைய 5% பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு ஐஎம்எப் கவனம் செலுத்துகிறது. 2022 இல் 8.2% ஆக இருந்த இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வீதம், 2024 இல் 13.5% ஆக உயர்ந்துள்ளது. இது வலுவான நிதி செயல்திறனைப் பிரதிபலிப்பதுடன், கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்ததன் மூலம் சர்வதேச நாணய நிதியத்திட்டத்தின் ஒட்டுமொத்த செயல்திறன் வலுவாக உள்ளதாக ஜூலி கோசெக் மேலும் தெரிவித்தார்.

# அரச நிதி பற்றிய குழுவின் உறுப்பினரானார் நிஷாந்த

அரச நிதி பற்றிய குழு மற்றும் வழிவகைகள் பற்றிய குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த ஜயவீர நியமிக்கப்பட்டுள்ளார் என்று சபாநாயகர் அறிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷண சூரியப்பெரும தனது நாடாளுமன்ற உறுப்புரிமையிலிருந்து விலகியதன் காரணமாக அரச நிதி பற்றிய குழு மற்றும் வழிவகைகள் பற்றிய குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 130(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம், 2025 ஜூலை 24 தெரிவுக்குழுவினால், நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த ஜயவீர அந்தக் குழுக்களில் பணியாற்றுவதற்காக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் என சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன இன்று (25) நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.



## உயிர்த்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும்போது, அந்த விசாரணை எவ்வாறு நீதியான விசாரணை என தெரிவிக்க முடியும்?' என்றார்.

பிரதமர் அதற்குப் பதிலளிக்கும்போது தெரிவித்ததாவது:

அநுர ஜயசிங்க 2024லேயே பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019இலே இடம்பெற்றது. இந்தத் தாக்குதல் தொடர்பில் 2019இல் இருந்து விசாரணை இடம்பெற்று வருகிறது. அப்போது விசாரணைகளைச் சுயாதீனமாக நடத்த இடமிருந்தது. ஆனால் செய்யவில்லை. அதுதான் பிரச்சினை. ஆனால் நாங்கள் விசாரணை மேற்கொள்வோம். யாரும் குழப்பமடைய தேவையில்லை.

எமது பிரதி அமைச்சர் இதொடர்பில் நாடாளுமன்றத்திலும் தெரிவித்திருக்கிறார். குற்றப்புலனாய்வு பிரிவிலும் வாக்குமூலம் வழங்கி இருக்கிறார். இவர்களுக்குப் பல வருடங்களாக செய்ய முடியாமல் போன இந்த வேலையை, தற்போது நாங்கள் மேற்கொள்வதை பொறுத்துக்கொள்ள முடியாமல் இருப்பது தொடர்பில் எங்களுக்கு செய்வதற்கு ஒன்றுமில்லை. எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணையை நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம். அதில் மறைப்பதற்கு எங்களுக்கு ஒன்றும் இல்லை. அனைத்து விடயங்களையும் முன்வைத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்ட நடவடிக்கை எடுப்போம்- என்றார்.

அதேநேரம் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எழுப்பிய கேள்விக்கு பிரதமர் பதிலளிக்கையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவில் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடமை, பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றத் தவறியமைக்காக குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்களை வெளியிடுவது வழக்கு விசாரணைகளுக்குப் பாதிப்பாக அமைவதால் அந்த விவரங்களை தற்போது வெளியிட முடியாது. என்றாலும் அறிக்கையை ஆராய்ந்து பார்க்க யாருக்கு வேண்டுமானாலும் முடியும். அத்துடன் விசாரணைகளின் முடிவில் சட்டமா அதிபரின் பரிந்துரைக்கமைய தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் குற்றவியல் சட்டத்துக்கு கீழ் தண்டனை பெற்றுக்கொடுக்க எமது ஆளும்தரப்பு பின்வாங்கப்போவதில்லை. அதேநேரம் இதற்குப் பொறுப்புக்கூறக்கூடிய அதிகாரிகள் தற்போது ஆளும்தரப்பின் கீழ் இருப்பார்களானால், அவர்களுக்கும் சட்டத்தை ஒரே மாதிரி செயற்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## வரலாற்றில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிக்க அரசியல்வாதியென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜவரோதயம் சம்பந்தன், ஏ. பிலபிற்றிய, டபிள்யூ. ஏ.ஏக்கநாயக்க, லக்கி ஜயவர்த்தன மற்றும் மாலனீ பொன்சேக்கா ஆகியோர் மீதான அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்..

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத ஒருவராக மறைந்த இரா.சம்பந்தன் இருந்தார். அவரின் செயற்பாடுகள் அனைவருக்கும் முன்மாதிரியானவையே. எப்போதும் அவர் மக்கள் தொடர்பிலேயே சிந்தித்து நடந்துகொண்டார். அவர் ஒரு மனிதாபிமானத்திற்கு சிறந்ததொரு ஆலோசகரும் கூட. பல சந்தர்ப்பங்களில் சமூக, பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கதைத்துள்ளார். அரசியலில் சிறந்தவொரு தலைவராக செயற்பட்டார்.

எமது அரசியல் வரலாற்றில் உருவாகிய சிரேஷ்ட தலைவர்களிடையே சிறந்த குணாம்சங்களுடன் மதிப்பு மிக்க அரசியல்வாதியாக, நாட்டின் இறையாண்மை, அரசியல் சுதந்திரத்திற்காக பங்களிப்பு செய்த, தான் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களின் சிவில், கலாசாரம் உள்ளிட்ட மனித உரிமைகளுக்காக பங்களிப்பு வழங்கிய அவரின் மறைவுக்காக அவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

## மருந்தாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும், மருந்தக உரிமையாளர்கள் மற்றும் மருந்தாளர்களின் வேண்டுகோளின் பேரில் சட்டத்தின் சில பிரிவுகளை அமுல்படுத்துவது அப்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும், தற்போதைய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்தவுடன், மருந்தகங்கள் தொடர்பாக மீண்டும் கடுமையான விதிமுறைகளை பின்பற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் பல மருந்தக உரிமையாளர்களின் உரிமப் பத்திரங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கைக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதான தகவல்களும் முன்வைக்கப்படுகின்றன.

நாடு முழுவதும் மருந்தாளுநர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்காமல், மருந்தகங்கள் மீது கடுமையான விதிமுறைகள் தொடர்ந்து விதிக்கப்படுவது குறித்து மருந்தக உரிமையாளர்கள் தங்கள் கவலையை வெளிப்படுத்துகின்றனர். எனவே, இந்த விடயத்தில் அரசாங்கத்தின் விசேட கவனத்தை திருப்பும் நோக்கில் பின்வரும் கேள்விகளை நான் எழுப்புகிறேன்.

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட மருந்தாளுநர்கள், பயிற்சி பெற்ற மருந்தாளுநர்கள் மற்றும் தற்போதைய மருந்தாளுநர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாவை ?

நாட்டில் காணப்படும் ஒட்டுமொத்த மருந்தக உரிமையாளர்கள் தொடர்பான தகவல்களைக் கொண்ட அறிக்கையை இந்த சபையில் சமர்ப்பிக்க முடியுமா?

தற்போது பல்கலைக்கழக கட்டமைப்பில் இருந்து வருடத்திற்கு வெளியேறும் மருந்தாளுநர்களின் எண்ணிக்கை யாது ? இதன் பிரகாரம், தற்போது எத்தனை பட்டதாரி மருந்தாளுநர்கள் உள்ளனர்? வெளிவாரி மருந்தாளுநர்கள் பரீட்சையை எதிர்கொள்பவர்களில் எத்தனை மருந்தாளுநர்கள் ஒரே தடவையில் பரீட்சையில் தேர்ச்சி பெறுகிறார்கள்?

பயிலுநர் மருந்தாளுநர்களின் பயிற்சி நடவடிக்கைகளை வலுப்படுத்த ஆளும்தரப்பால் எத்தகைய திட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது? இதுவரை நடைமுறையில் இருந்த பயிலுநர் மருந்தாளுநர் பயிற்சி முறையை ஆளும்தரப்பு மாற்ற விரும்புகிறதா? அதற்கான காரணங்கள் யாவை ?

வெளிவாரி மருந்தாளுநர் பரீட்சையை இல்லாதொழிக்க ஆளும்தரப்பு திட்டமிட்டுள்ளதா? அப்படியானால், தனியார் துறையில் மருந்தாளுநர்களின் தேவையை ஆளும்தரப்பு எவ்வாறு நிவர்த்தி செய்யும்?

2025 ஆம் ஆண்டில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையால் எத்தனை மருந்தக உரிமையாளர்களின் உரிமப்பத்திரங்களைப் புதுப்பித்தல் நடவடிக்கை மறுக்கப்பட்டுள்ளன? இதற்கான காரணங்கள் யாவை ?

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபை முந்தைய தளர்வான போக்கில் இருந்து விலகி, சட்டத்தின்படி கடுமையான நடைமுறையைப் பின்பற்றி, நடைமுறையில் காணப்பட்ட பல உரிமப்பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து சுகாதார அமைச்சின் நிலைப்பாடு என்ன ? இந்த விடயத்தில் மருந்தக உரிமையாளர்களுக்கு ஆளும்தரப்பு ஏதேனும் நிவாரணம் வழங்க எதிர்பார்க்கிறதா?

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையால் மருந்தக உரிமையாளர்கள்/மருந்தாளுநர்கள் மீது எடுக்கப்பட்டு வரும் கடுமையான நடவடிக்கைகள் காரணமாக எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க தற்போதைய அமைச்சர் குழுவொன்றை நியமித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவின் பரிந்துரைகள் யாவை? இந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்காக வேண்டி ஆளும்தரப்பு எடுத்த நடவடிக்கை என்ன? அவ்வாறு இல்லையெனின், குறித்த பரிந்துரைகளைச் செயல்படுத்துவதில் காணப்படும் தடைகள் யாவை? எனக்கேட்கிறேன் என்றார்.

## மாலைதீவு பயணம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியிருப்பார்.

இந்தப் பயணத்தின்போது இருநாட்டுத் தலைவர்களும் பரஸ்பர ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான பேச்சுக்களில் ஈடுபடுவர். சில புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் செய்யப்படவுள்ளன.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கிடையில் முறையான இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டு இவ்வருடத்துடன் 60 ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில் அரசுத் தலைவரின் மாலைதீவிற்கான பயணம் இடம்பெறுகிறது.

அரசுத் தலைவரின் இந்தப் பயணத்தில் வெளிநாட்டு அலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் பலர் இணைந்து கொள்ளவுள்ளனர்.

## அரசுத் தலைவர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணையில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத சிறந்தவொரு அரசியல்வாதியாக சம்பந்தன் இருந்தார். அவரின் மறைவு தொடர்பில் அவரின் குடும்பத்தினருக்கு எமது கவலைகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவருடன் நான் 2001 முதல் 2010 வரையிலும் 2015 முதல் 2020 வரையிலும் எதிர்க்கட்சியில் இருந்துள்ளேன். அதன்போது எமது கொள்கைகளை எதுவாக இருந்தாலும் இந்த நாடாளுமன்றத்தில் வேறு அரசியல்வாதிகளிடம் இருந்து மாறுபட்ட ஒருவராக இருந்தார். அவரின் அரசியல் கொள்கைகளில் நூறுவீதம் இணங்காதவர்களாக இருந்தாலும் நாங்கள் எப்போதும் மதிப்பளிக்கும் தலைவராக இருந்துள்ளார்.

இவருக்கும் எமக்கும் இடையிலான வயது வேறுபாடுகள் இருந்தாலும் மிகவும் மதிக்கத்தக்க ஒருவராக அவரைப் பார்த்தோம். அவருடன் 2010 - 2019 வரையிலான காலத்தில் புதிய அரசியலமைப்பு தொடர்பான குழுவில் நெருக்கமாக பழகக் கிடைத்தது. சகல கூட்டங்களிலும் கலந்துகொண்டார். அவர் தீர்வுப் பேச்சுக்களில் இருந்து பல்வேறு அனுபவங்களைக் கொண்டவர். நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு அரசமைப்பைத் தயாரித்தாலும் அதனை சர்வஜன வாக்கெடுப்புக்கு விடவேண்டும் என்று கூறியிருந்தார். இவரின் இந்தக் கருத்து மிகவும் முக்கியமானதாக பார்க்கின்றோம்.

அவர் உரையாற்றும்போது மனசாட்சிக்கு இணங்கிய பலமான உரையாக இருக்கும். அவ்வாறானவர்கள் இன்னும் இருப்பார்களாக இருந்தால் நாடாளுமன்றத்தின் தரம் இன்னும் மேலுயரும். அவர் இந்த நாட்டின் பிரதமர் பதவி மற்றும் அரசுத் தலைவர் பதவிக்கும் பொருத்தமானவர் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால் இந்த நாட்டுக்கு அந்த அதிஷ்டம் கிடைக்காவிட்டாலும் அவரின் குணாம்சங்களை கொண்ட தலைவர்கள் அந்த பதவிகளுக்கு செல்லவேண்டும். இதனால் அவரின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் கௌரவமளிக்க வேண்டும் என்றார்.

## இரு தலைமுறைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் வழிகாட்டியின் இழப்பாகவுமே நிகழ்ந்திருக்கிறதென இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், பிலபிற்றிய, ஏக்கநாயக்க, லக்கி ஜயவர்த்தன மற்றும் மாலனி பொன்சேக்கா ஆகியோர் மீதான அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான அமரர் சம்பந்தன் காலமாகி ஒருவருடம் நிரம்பியுள்ள சூழலிலும், அவரது மறைவினால் தமிழ்த்தேசிய அரசியற்தளத்தில் ஏற்பட்ட இடைவெளியை உணர்ந்தவனாக, இந்தச் சபையில் அவரின் மறைவுக்கான ஆழ்ந்த துக்கத்தையும் மரியாதையுடனான இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விடுதலைப் போராட்ட மௌனிப்பின் பின்னர் திக்குத் தெரியாதிருந்த ஈழத்தமிழர்களின் அரசியல் கேள்விக்குறியாக இருந்தபோது, காலத்தால் அடையாளப்படுத்தப்பட்ட சம்பந்தனின் தலைமைத்துவ முதிர்ச்சிதான், இதுவரை காலமும் தமிழ்த்தேசியக் கட்சிகளின் கூட்டுப் பயணத்திற்கு அடித்தளமிட்டிருந்தது. அரசியல் வெறுமை சூழ்ந்த கடந்த 14 ஆண்டுகளை இராஜதந்திர ரீதியாக சாதுரியமாக கையாண்ட அரசியற் தலைவராகவும், அவரைப் பின்பற்றும் எங்களின் அரசியற் பயணத்திற்கான வழிவரைபடத்தை உருவாக்கித் தந்த ஒருவராகவும், சம்பந்தர் சாணக்கியம் மிக்க அரசியற் தலைவராக தனது பயணத்தில் வெற்றிகண்டிருந்தார் என்பதே உண்மை.

சர்வதேச நாடுகளின் இராஜதந்திரிகளால் மதிக்கப்பட்ட, ஈழத்தமிழர்களின் அரசியல் தீர்வு குறித்தும் தமிழினப் படுகொலைக்கான நீதி விசாரணை குறித்தும் ஈழத்தமிழர்களின் பிரதிநிதியாக அணுகத்தக்க அரசியற் தலைவராகவும் சம்பந்தன் ஐயா, அடையாளம் பெற்றிருந்தார். அது அவரது அரசியல் அனுபவத்திற்கும், தலைமைத்துவ ஆளுமைக்கும், இனம்சார் அரசியலில் அவர் ஆற்றிய வகிபங்குக்கும் கிடைத்த அடையாளமாகும்.

சம்பந்தன் ஐயாவின் மறைவென்பது, ஈழத்தமிழினத்தின் இரு தலைமுறை அரசியல் வரலாற்றில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகவும், அவரது அரசியல் தலைமையை ஏற்றிருந்த எங்களுக்கு இனியொருபோதும் நிரப்பவே முடியாத அரசியல் வழிகாட்டியின் இழப்பாகவுமே நிகழ்ந்திருக்கிறது.

இருந்தபோதும் அவரது தடங்களைப் பின்பற்றும் ஒருவனாக, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இருப்பை உறுதிசெய்யவும், ஈழத்தமிழர்களது அரசியல் உரித்துக்கான தமிழ்த் தேசியப் பயணத்தில் எனக்கிருக்கும் தார்மீகப் பங்கை உறுதிசெய்யவும், இதயசுத்தியோடு பணியாற்றுவேன் என்ற உறுதியோடு ஐயாவின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்து, அவரது குடும்பத்தினருக்கான அனுதாபங்களையும் பகிர்ந்துகொள்கின்றேன் என்றார்.

## செம்மணியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

16 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி பகுதியில் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01' மற்றும் 'தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02' எனநீதிமன்றினால் அடையாளப்படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் கடந்த 5 நாள்களாக அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புதைகுழி அகழ்வுப் பணியின் இரண்டாம் கட்டத்திற்கென 45 நாட்கள் நீதிமன்றினால் அனுமதிக்கப்பட்டது அதில் 15 நாள்கள் தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. 10 நாள்கள் ஓய்வின் பின்னர் ஜூலை 21 மீண்டும் அகழ்வுப் பணி தொடங்கியது. தொடர்ந்து 5 நாள்களாக இடம்பெற்றுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் அகழ்வு பணிகள் இதுவரையில் கட்டம் கட்டமாக 29 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதில் 81 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதுவரையில் 90 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதேவேளை, அகழ்வுப் பணிகளின் போது தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல.'2'குற்றப் பிரதேசத்திற்கு நடுவே அடையாளம் காணப்பட்ட, முறையாக நல்லடக்கம் செய்யப்பட்ட சடலங்கள் நேற்று மீண்டும் மண்போட்டு மூடப்பட்டன. கடந்த சில தினங்களில் அடையாளம் காணப்பட்ட இந்த எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முறையாக நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளமைக்கான சான்றாதாரங்கள் காணப்பட்டதை அடுத்தே அவை மீண்டும் மூடப்பட்டன. அந்த எலும்புக்கூட்டுத் தொகுதிகள் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டமைக்கான ஆதாரங்கள், எலும்பு கூட்டு தொகுதி அடையாளம் காணப்பட்ட முறைமை, சடலங்கள் பிரேத பெட்டியில் வைக்கப்பட்டமைக்கான ஆதாரம் ஆகியவை காணப்படுவதனால், அவை முறையாக நல்லடக்கம் செய்யப்பட்டவை என்பது உறுதிப்படுத்தப்பட்டு மூடப்பட்டன.

அத்துடன் , மேலும் மனித புதைகுழிகள் காணப்படலாம் என சந்தேகிக்கப்படும் பகுதிகளில் அகழ்வு பணிகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக, அவ்விடங்களில் துப்பரவு பணிகளும் நேற்று மேற்கொள்ளப்பட்டது.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு வீட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு வீட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு வீட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

# சம்பந்தன் ஓர் உதாரண புருஷர் நாடாளுமன்றில் நேற்று புகழாரம்

நாடாளுமன்றத்தில் காணக்கிடைத்த மிகச் சிறந்த ஆளுமையாகவும் அரசியல்வாதிகளுக்கு உதாரண புருஷராகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற சம்பந்தன் திகழ்ந்தார் என்று அரசியல் கட்சித் தலைவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், பிலபிற்றிய, ஏக்கநாயக்க, லக்கி ஜயவர்த்தன மற்றும் மாலனி பொன்சேக்கா ஆகியோர் மீதான அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்ததாவது:

சம்பந்தன் இந்த நாடாளுமன்றத்தில் நாங்கள் காணுகின்ற மிக அபூர்வமான ஆளுமையாகும். சம்பந்தனின் அரசியல் என்பது வெவ்வேறு யுகங்களாக ஆராயப்பட வேண்டியது. சரிதம் எழுதப்படும்போது ஒவ்வொரு யுகங்களில் அவரின் பங்களிப்பு இருந்துள்ளது. தமிழ் சமூகத்தின் விடுதலைக்காக எப்படி அவர் செயல்பட்டார் என்பது பற்றி நிறைய பேசலாம். தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு வகிபாகத்தை அவர் கொண்டிருந்தார். அதற்கு இந்த சபையில் பலரும் சான்று பகிர்வார்கள். அவருடைய ஆத்மா சாந்தியடையட்டும் என்று பிரார்த்திக்கின்றேன் -என்றார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியூதின் உரையாற்றுகையில், 'சம்பந்தன் இந்த நாட்டில் எல்லோருக்கும் முன்னுதாரமாக திகழ்ந்தவர். நல்ல பண்பான அரசியல் தலைவர். திருகோணமலை மாவட்ட மக்களால் நன்கு நேசிக்கப்பட்டவர். அவர் சகல பிரச்சினைகளின் போதும் அந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பங்கு வகித்தார். நடுநிலையான போக்கையும், சிறந்த அரசியல் அறிவையும் கொண்ட சம்பந்தன் ஐயாவை இழந்துள்ளோம். இவரை சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உயர்ந்த அந்தஸ்துள்ளவராக இருந்ததுடன், எதிர்க்கட்சித் தலைவராகவும். இருந்தார். இவர் இங்குள்ள அரசியல்வாதிகளுக்கு உதாரண புருஷராவார்' என்றார்.

லங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உரையாற்றுகையில் 'தேசிய அரசியலில் சிறந்தவொரு நபராக சம்பந்தன் இருந்தார். எப்போதும் அரசியல் தீர்வுக்காக முன்னின்றார். பலரும் பயங்கரவாத தீர்வை தேடிப் போனபோது, அந்த விடயத்தில் அரசியல் தீர்வு காண செயற்பட்டார். அவர் ஜனநாயக முறைமையில் நாடாளுமன்றத்தில் இருந்து மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முயற்சித்தார். அவரின் குடும்பத்தினருக்கும் அவரின் கட்சியினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்'என்றார்.

இலங்கை தொழிலாலளர் காங்கிரஸ் தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் உரையாற்றுகையில், 'சம்பந்தன் ஐயாவுடன் எனக்கு நெருக்கமான உறவு இல்லாவிட்டாலும் அவரின் அனுபவங்கள் அவரின் ஆலோசனைகளை பெற்றுள்ளேன். என்னால் கூறக் கூடிய முன்னுதாரணத்திற்கு அவரையே குறிப்பிடுவேன். மறைந்த ஆறுமுகன் தொண்டமானுக்கும் சம்பந்தன் ஐயாவுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது. அவருக்கு எமது மறியாதை எப்போதும் இருக்கும் அவரின் மறைவு தொடர்பில் அவருடைய குடும்பத்தினருக்கு எனது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்' என்றார்.

## கைதிகள் பொது மன்னிப்பில் சர்ச்சை ஏற்படுத்திய குற்றவாளிக்கு 7 வருட கடூழிய சிறைத் தண்டனை

குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டு அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2025 வெசாக் பூரணை தினத்தன்று அரசுத் தலைவர் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டதாகக்கூறப்படும் அத்துல திலக்கரத்ன எனும் குற்றவாளிக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் 7 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

இதற்கு மேலதிகமாக பாதிக்கப்பட்ட தரப்புக்கு 40 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறும் உத்தரவிட்ட நீதிபதி குறித்த நட்ட ஈட்டை செலுத்த தவறினால் மேலும் 10 மாத கடூழிய சிறைத் தண்டனை விதித்தும் தீர்ப்பளித்தார்.

அத்துல திலகரத்ன எனும் குறித்த நபர் 40 இலட்சம் ரூபா மோசடி செய்த சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் மேல் நீதிமன்றினால் அண்மையில் குற்றவாளியாக உறுதிப்படுத்தப்பட்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டவராவார்.

நிதி நிறுவனமொன்றின் அநுராதபுரம் கிளையின் முன்னாள் முகாமையாளராக பணியாற்றிய குறித்த நபரிடம் 2014 பெப்ரவரி 17 ஜூன் 09 காலப்பகுதியில் பங்குச் சந்தையில் இலாபம் பெற்றுத் தருமாறு நபர் ஒருவரால் வழங்கப்பட்ட 40 இலட்சம் ரூபா பணத்தை ஏமாற்றிய சம்பவம் தொடர்பிலேயே சந்தேகநபர் குற்றவாளியாக நிரூபணமாகியுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பான வழக்கின் தீர்ப்பு மே 02 அநுராதபுரம் மேல் நீதிமன்றினால் வழங்கப்பட்டது.

இதன்போது வடமத்திய மாகாணத்திற்கான மேல் நீதிமன்ற நீதிவான் லக்மாலி ஹேவாவசம் குற்றவாளிக்கு 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்தார் (5 வருடங்களுக்கு இவ்வாறான குற்றங்களை புரிந்தால் 2 வருட கடூழிய சிறைவாசத்தை அனுபவிக்க நேரிடும் 20 இலட்சம் ரூபா நட்ட ஈட்டை உரிய தரப்பிற்கு செலுத்துமாறும் தீர்ப்பளிக்கப்பட்டது.

அத்துடன் குறித்த நட்ட ஈட்டை செலுத்த தவறினால் அதனை அபராத தொகையாக அறவிடவும் அதனை மையப்படுத்தி 6 மாத கடூழிய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது. இதனைவிட 20 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த அபராத தொகையை செலுத்துவது தொடர்பான வழக்கு ஜூன் 04ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதற்கமைய குறித்த வழக்கு கடந்த 04 ஆம் திகதி அநுராதபுரம் மேல் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த குற்றவாளி மே 12ஆம் திகதி அரசுத் தலைவர் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டதாக அநுராதபுரம் சிறை அதிகாரிகள் நீதிமன்றிற்கு அறிவித்திருந்தனர்.

இதன்போது அரசுத் தலைவர் பொது மன்னிப்பின் நிபந்தனைகளின் பிரகாரம் குறித்த குற்றவாளியின் அபராத தொகை ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் மன்றுக்கு அறிவித்திருந்தனர். இதனைத் தொடர்ந்து குற்றவாளிக்கு எதிரான குறித்த வழக்கிலிருந்து அவரை விடுவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் சி.ஐ.டி.யினர் முன்னெடுத்த விசாரணைகளில் அரசுத் தலைவர் பொது மன்னிப்பை மோசடியாக பயன்படுத்தி கடந்த வெசக் காலத்தில் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்தது. இந்த பின்னணியில் குறித்தநபர் தொடர்பிலானவழக்கு விசாரணையின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. இந்த வழக்கு அநுரதாபுரம் வடமத்திய மாகாணத்திற்கான மேல் நீதிமன்ற நீதிபதி லக்மாலி ஹேவாவசம் தீர்ப்பை அளித்தார்.

குற்றவாளிக்கு எதிராக நிதி மோசடி குற்றச்சாட்டில் அநுரதாபுரம் மேல் நீதிமன்றத்தில் 6 வழக்குகளும் அநுராதபுரம் பிரதான நீதிவான் நீதிமன்றில் 22 வழக்குகளும் தொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் அநுராதபுரம் பிரதான நீதிமன்றில் இடம்பெறும் வழக்கு விசாரணைகளுக்கு அமைய குறித்த நபர் 50 கோடி ரூபாவுக்கும் அதிகமாக மோசடி செய்துள்ளதாக வெளிக்கொணரப்பட்டுள்ளது.

பிரபல வர்த்தகர்கள், வைத்தியர்கள், சட்ட வைத்திய அதிகாரிகள், விசேட வைத்திய நிபுணர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரச நிர்வாக சேவையின் உறுப்பினர்கள் எனப் பலர் இந்த மோசடியில் சிக்கியுள்ளனர் என்று விசாரணைகளில் வெளிக்கொணரப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்..

## பாலியல் துன்புறுத்தல்களுக்கு இனி பொதுப் போக்குவரத்தில் இடமில்லை

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

பேருந்துகள், ரயில்கள் அல்லது நிலையங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு இடமில்லை என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பொது இடங்களில் பாலியல் துன்புறுத்தலை முடிவுக்குக் கொண்டு வர தேசிய பிரசார அங்குராட்பண நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுப்போக்குவரத்தானது வாய்ப்புகள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பை இணைக்கும் ஒரு முக்கியமான இணைப்பாகும். ஆனால், பெரும்பாலான பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு, பொதுப் போக்குவரத்து என்பது அச்சத்தின் அடிப்படைக்காரணியாக மாறியுள்ளது.

எனவே, பாதுகாப்பு என்பது ஒரு ஆடம்பரமான விடயமாக இல்லாமல், அது ஒரு உரிமையாக இருப்பதற்காக, செயற்பாடுகள் மற்றும் மேற்பார்வை முதல் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி வரையான போக்குவரத்து சீர்திருத்தங்களின் மையமாக நாங்கள் பாதுகாப்பை உள்வாங்கி வருகிறோம்.

எங்கள் பேருந்துகள், ரயில்கள் அல்லது நிலையங்களில் பாலியல் துன்புறுத்தலுக்கு இடமில்லை. பாதுகாப்பே நமது கடமை, அதை ஒரு யதார்த்தமாக்க நாம் இப்போதே செயல்பட வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் கருத்து தெரிவிக்கையில்,

பொது இடங்களில் இடம்பெறும் பாலின அடிப்படையிலான வன்முறை ஒரு பாதுகாப்பு சார்ந்த கவலை மட்டுமல்ல, இது ஒரு மனித உரிமைகள் சார்ந்த பிரச்சனையாகும்.

பேருந்துகள், ரயில்கள் மற்றும் நிலையங்களில் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தலானது, சுதந்திரமான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதுடன் கல்வி, வாழ்வாதாரம் மற்றும் பொது வாழ்க்கையில் பெண்களின் அணுகலை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

அனைவரதும், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான பாதுகாப்பை உறுதி செய்வது நமது பொறுப்பாகும். ஒவ்வொரு பெண்ணும், சிறுமியும் அச்சமின்றி வாழவும், நடமாடவும், செழித்து வளரவும் இந்த பிரசாரம் ஒரு மைல்கல்லாக அமைகிறது.

இலங்கையில் பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தீர்ப்பதற்கு நீண்டகால ஆதரவு மற்றும் தொழில்நுட்ப தலைமைத்துவத்தை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்திற்கு நன்றி கூறுகிறேன் என்றார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.07.2025இல் வெளியிடப்பெற்றது